Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**பின்வரும் பாடலை வாசித்து கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை தருக**

**පහත ගීතය කියවා ප්‍රශ්න වලට පිළිතුරු සපයන්න**

அப்பா என்னை அழைத்துச் சென்றார்

அங்கிருந்த குயிலும் ,மயிலும் ஆடி திரிந்தன

பொல்லா நரியும் புனுகுப் பூனையும் எல்லாம் நின்றன

குட்டி மான்கள் ஒட்டகச்சிவிங்கி கூட இருந்தன

குரங்கு என்னைப் பார்த்து குறுகுறு என்றது

யானை ஒன்று காதைக் காதை ஆட்டி நின்றது

முதலை தலையைத் தலையை தூக்கி பார்த்து மூச்சு விட்டது

கரடி கூட உறுமிக் கொண்டே காலைத் தூக்கிற்று

சிறுத்தை ஒன்று கோபத்தோடு சீறிப் பாய்ந்தது
அங்கு எங்கள் அருகிலேயே சிங்கம் நின்றது

கரடி சிங்கம் புலியை கண்டேன் கண்டும் பயமில்லை
சூரனைப் போல் நின்றிருந்தேன் துளியும் பயமில்லை

சென்ற அந்த இடம் உனக்குத் தெரியவில்லையா?
மிருகக்காட்சிச்சாலை தானே! வேறொன்றுமில்லை

1. அங்கிருந்த குயிலும் மயிலும் என்ன செய்தது?
2. அங்கிருந்த மிருகங்கள் எவை?
3. குறுகுறு என்ற மிருகம் எது?
4. யானை என்ன செய்தது?
5. கோபத்தோடு சீறிப்பாய்ந்த மிருகம் எது?
6. முதலை என்ன செய்தது?
7. காலைத் தூக்கிய மிருகம் யாது?
8. அப்பா அழைத்துச் சென்ற இடம் எது?

9. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்கள் எழுதுக?

1. காது 2. கோபம் 3. அருகில்

10. இங்கு கூறப்பட்டுள்ள மிருகங்கள் 5 பெயர்களை எழுதுக?